Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 14 | 28-05-2003 | புதன் கிழமை | ஓசை 99

**ADVANCER**
**கணினி நிறுவனம், புதுக்குடியிருப்பு**

எமது நிறுவனத்தில் கீழ்வரும் வகுப்புக்கள் 30.05.03 திகதி மாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. கற்க விருப்பமுடையோர் முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும்.

1) Diploma in MS-office Application,
2) Certificate in MS-Visual Basic Programming. மேலதிக விபரங்களுக்கு: நிர்வாகி.

# அரசின் உத்தேச பிரேரணை எரிக் சொல்ஹெய்மிடம் கையளிப்பு?

## எரிக் புலிகளைச் சந்திக்க இறுதிக்கட்ட ஏற்பாடு

(கொழும்பு)

**ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் முன்வைத்துள்ள உத்தேசப் பிரேரணைகள் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்மிடம் சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

இதேவேளை, இப்பிரேரணைகளைப் புலிகளிடம் சமர்ப்பிக்கச் செல்வதற்கான இறுதிக்கட்ட ஏற்பாடுகளுக்காக தான் காத்திருப்பதாக சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகள் கோரியுள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்குப்பதிலளிக்கும் வகையிலான, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தேசப் பிரேரணைகள் அடங்கிய கடிதம் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்மிடம் சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆயினும் இது குறித்து ஊர்ஜிதப்படுத்தப்படாத நிலையே காணப்படுகின்றது.

ஏற்கனவே இவ் உத்தேச நகல் திட்டம் நேற்று முன்தினமே சமர்ப்பிக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்த போதும் நேற்றே இவ் உத்தேச நகல் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதேவேளை அரசிடமிருந்து உத்தேசப் பிரேரணைகளைப் பெற்றுக் கொண்டமை குறித்து கருத்து எதனையும் கூறாத எரிச்சொல்

(08ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ். அமைச்சர் சந்தித்துப் பேச்சு!

(கொழும்பு)

கொழும்பிற்கு வந்துள்ள அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்ஸ்சாண்டர் டவுனர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து, தடைப்பட்டுள்ள புலிகள்-அரசு சமாதானப் பேச்சுவார்த்தை பற்றி கலந்துரையாடியுள்ளார். விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் கண்ணிவெடிச் செயற்பாட்டு ஒருங்கிணைப்புச் செயலகம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கண்ணிவெடி செயற்பாட்டு ஒருங்கிணைப்புச் செயலகம் நேற்று கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கருகாமையில் திறந்து வைக்கப்பட்டது. அவுஸ்திரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த அ.பரராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈகச்சுடரினை அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான இணைப்பாளர் தியாகராஜா ஏற்றிவைக்க தமிழீழத்தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முரளி ஏற்றிவைத்தார். நிறுவனப் பெயர்ப்பலகையினை கிளி. மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் திரை நீக்கம் செய்து வைக்க சர்வதேச தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் கலாநிதி மகேஸ்வரன் அலுவலகத்தினை சம்பிரதாய பூர்வமாக

(08ஆம் பக்கம் பார்க்க)

# எரிக் சொல்ஹெய்ம் லண்டன் சென்று அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திப்பார்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை குறித்து சிறிலங்கா அரசின் பிரேரணையைப் பெற்றுக்கொண்டு. நோர்வே சிறப்புத்தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் லண்டன் செல்லவுள்ளார். அங்கு அரசியல் ஆலோசகர், அன்ரன் பாலசிங்கம் அவர்களைச் சந்தித்து இப் பிரேரணைகளைக் கையளிப்பார். முன்னதாக எரிக்சொல்ஹெய்ம் இப்பிரேரணைகளுடன் வன்னிக்கு வருகைதர இருந்ததாகவும் ஆனால் இப்பொழுது லண்டன் செல்லவிருப்பதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அமைச்சர் ராஜித சேனாரட்ணவின் அரைமணி நேர யாழ்ப்பாண விஜயம்

(வடமராட்சி)

சிறிலங்காவின் காணி அமைச்சர் ராஜிதசேனாரட்ண நேற்று யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்து அரைமணி நேரம் மட்டும் தங்கிவிட்டு மீண்டும் கொழும்பு திரும்பிச் சென்றுள்ளார். உலங்கு வானூர்தி மூலம் காலை 11.00 மணிக்கு சாவகச்சேரி விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய இவர் படைஉயரதிகாரிகள் மற்றும் பொலிசார் சகிதம் சாவகச்சேரி நகரப்பகுதியைப் பார்வையிட்டதுடன் அரைமணி நேரத்துக்கும் குறைவான நேரத்திற்குள் அங்கிருந்து புறப்பட்டுச்சென்று மீண்டும் கொழும்பு திரும்பியுள்ளார்.

இதன் போது நகரில் வைத்தியசாலை மற்றும் அரச கட்டடங்களைப் பார்வையிட்டுள்ளார்.

தனங்கிளப்பு, மறவன்புலவு, கைதடி, நாவற்குழிப் பகுதிகளை இவர்

(08ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகம் தொடர்பாக சிறிலங்கா நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்

## நோர்வேப் பிரதமர் ஜப்பானில் தெரிவிப்பு

வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று சிறிலங்கா அரசாங்கத்திடம் விடுதலைப்புலிகள் விடுத்த கோரிக்கைக்கு சிறிலங்கா அரசாங்கம் நெகிழ்வுப்போக்கை காண்பிக்க வேண்டும் என்று நோர்வேயின் பிரதம மந்திரி கஜேல் மக்னெ பொண்டே தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜப்பான் டோக்கியோவில் ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகத்தில் நேற்று சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்திய பின்னர் அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் இக்கருத்தினை

(08ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டை வெடிக்க வைத்து தனங்கிளப்பில் சிப்பாய் தற்கொலை

(வடமராட்சி)

தனக்குத்தானே கைக்குண்டு ஒன்றினை வெடிக்க வைத்து சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று தென்மராட்சிப் பகுதியில் நேற்றுக்காலை இடம் பெற்றுள்ளது.

தனங்கிளப்பு முன்னரங்கு காவல் நிலையப் பகுதியில் கடமையில் இருந்த படைச்சிப்பாயே கைக்குண்டை வயிற்றின் கீழ் வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டார்.

மிகமோசமான நிலையில் சிதைவடைந்து காணப்பட்ட சடலத்தை சாவகச்சேரி பொலிசார் சகிதம் நீதிபதி நேரில் சென்று பார்வையிட்டார். மரண விசாரணைகளின் பின்னர் சடலத்தை சொந்த இடத்துக்கு எடுத்துச்செல்லுமாறு உத்தரவிட்டார். (27)

## புலமைப்பரிசில் பரீட்சை டிசெம்பருக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

வரும் ஆவணி மாதம் நடைபெற இருந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில்" பரீட்சை டிசெம்பர் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வெள்ளப் பெருக்கு மற்றும் மண் சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசமக்களின் வேண்டுகோளிற்கு அமைய இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். இரத்திரபுரி, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, களுத்துறை மாவட்டங்களிலுள்ள பாடசாலைகள் பெரும் சேதமடைந்துள்ளன. சில கட்ட

(08ஆம் பக்கம் பார்க்க)

# டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றுவதை அனுமதிக்கக்கூடாது

## ஜப்பான் தூதரகம் முன் பிக்குகள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்கு பெறுவதை அனுமதிக்கக்கூடாது என்று கோரி பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளார்கள்.

கொழும்பில் உள்ள ஜப்பான் தூதரகத்தின் முன்பு நேற்று நடைபெற்றது. இதனை தேசிய பௌத்த பிக்குகள் முன்னணி மற்றும் நாட்டை பாதுகாப்பதற்கான பிக்குகள் முன்னணி ஆகிய அமைப்புக்கள் இணைந்து நடத்தியுள்ளன.

பொறளை சந்தியில் இருந்து ஊர்வலமாகச் சென்ற நூறு பேர் வரையிலான பிக்குகள், ஜப்பான் தூதரகம் முன் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு தூதரக அதிகாரிகளிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்கு பெற ஜப்பான்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சிறப்புற நடைபெற்ற தரவை படைமுகாம் தாக்குதல் 8 ஆம் ஆண்டு நினைவு நாள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தரவை படைமுகாம் தாக்குதலின் எட்டாம் ஆண்டு நினைவுநாள் நேற்று சிறப்புற இடம் பெற்றது. காலை நினைவு நிகழ்வுகளை மூத்த தளபதி கேணல் கருணா தேசியக்கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார். வினோதன் படையணி கொடியை தளபதி தாத்தாவும், மகளிர் படையணி கொடியை தளபதி தீந்தமிழும் ஏற்றிவைத்தனர்.

தரவை முகாம் தாக்குதலில் வீரச்சாவடைந்த லெப். கேணல் வினோ

(08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்மொழி மூல தொண்டராசிரியர்கள் 1000 பேருக்கு நிரந்தர நியமனம்

### தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றி வந்த 1000 தமிழ்மொழி மூல தொண்டர் ஆசிரியர்களுக்கும் 193 சிங்கள மொழிமூல தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ந.மகாசிவம் தெரிவித்துள்ளார். மேற்படி தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும்பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)

### தேவை

வயோதிப மாதுவைப் பராமரிக்க பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். விபரங்கட்கு தீன்சுவையகம் - கண்டி வீதி, மாங்குளம். (சி-7872)

### தேவை

தேர்ச்சிபெற்ற சமையலாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தீன் சுவையகம், கண்டி வீதி, மாங்குளம். (சி-7873)


## கிளிநொச்சி மாவட்ட

# பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையே 19 ஆவது விளையாட்டுப் போட்டி

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையிலான 19வது மாவட்ட விளையாட்டுப் போட்டி கிளி. மத்திய விளையாட்டு மைதானத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விளையாட்டு நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளி. அரச அதிபர் தி.இராசநாயகமும், சிறப்பு விருந்தினராக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

காலை 7.00 மணிமுதல் மாலை 5.30 மணி வரை இரு நாட்கள் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வாக நாளை மாலை கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவு, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## அவசர கலந்துரையாடல்

முல்லை. வலயத்திற்குட்பட்ட அனைத்து தொண்டர் ஆசிரியருக்குமான அவசர கலந்துரையாடல் நாளை வியாழன் மு.ப 10.00 மணிக்கு முல்லை. கல்விக்கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து தொண்டராசிரியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## விற்பனை செய்யலாம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்டச் செயலகமும், புதுக்குடியிருப்பு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து புதுக்குடியிருப்பில் செயற்படுத்தும் அர்ச்சுனா பால் பதனிடல் நிறுவனத்தின் பாலுற்பத்திகளுக்கு மக்கள் மத்தியிலான கிராக்கி அதிகரித்த நிலையில் பால் கொள்வனவினை அதிகரிக்க வேண்டிய கட்டாயத் தேவை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் தமது தேவைக்கு மிஞ்சிய பாலினை இந்த நிலையத்திற்கு விற்பனை செய்யுமாறு பொருண்மிய செய்திக்குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொள்கலன்கள் வழங்கப்படும்

(அலுவலக செய்தியாளர்)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் பாடசாலைக்கு போசாக்கு உணவு வழங்குவதற்கு முன்னோடியாக உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு உலக உணவுத் திட்ட அதிகாரிகள் முன்வந்துள்ளனர்.

இதன்பொருட்டு பின்தங்கிய 14 பாடசாலைகளுக்கு 20 அடி நீளமும், 10 அடி அகலமும், 8 அடி உயரமும் கொண்ட கொள்கலன்கள் முதற்கட்டமாக மேற்படி ஸ்தாபனத்தின் வழங்க முன்வந்துள்ளனரென கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார். (சோ)

## 7ஆவது ஆண்டு நினைவில்

**மண்ணில் மலராக**
1968 - 02 - 17

**மண்ணில் விதையாக**
1996 - 05 - 28





### கப்டன் விக்ரம் மாஸ்ரர் (வண்ணன்)

**முத்தையா ஸ்ரீகணேஸ்**

(வாதரவத்தை, யாழ்)

மண்பட்டதுயர் துடைக்க
*வரிப்புலியாய் எழுந்தவனே – நீ*
*மண்ணோடு கலந்து இன்று வருடங்கள் ஏழு –ஆனாலும்*
*எங்கள் உயிரோடும் உதிரத்தோடும்*
*ஒன்றாகிப் போய் விட்ட – உந்தன்*
*உள்ளத்து உணர்வுகளைச் சுமந்து...*
*என்றும் உன் நினைவுடன்*

(3291) **குடும்பத்தினர்.**

## துயர் பகிர்கின்றோம்

### செல்வி. க.துவாரகா

எமது பணிமனையின் வாகனச் சாரதி ம.கணேசலிங்கம் (கேப்பாப்புலவு) அவர்களின் ஒரே மகளான செல்வி. துவாரகா அவர்கள் அகாலச் சாவடைந்துள்ளார். அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவர்களின் துயரைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

**போராளிகள், ஊழியர்கள்,**
**தமிழீழ மாவீரர் பணிமனை,**
(3290) **தமிழீழ மாவீரர் துணைப்பணிமனை.**

## இதய அஞ்சலி



தோற்றம்
27-11-1956

மறைவு
23-05-2003

### திரு.அப்புத்துரை பரலோகராசா

(இரத்தினம்) த.1 5352 உரிமையாளர்
(தனியார் பேருந்து உரிமையாளர் கழக உறுப்பினர்)

பொன்னம்பலம்சாலை காரைநகர் வடக்கை சொந்த இடமாகவும், இல: 85/03 திருவையாறு கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.அ.பரலோகராசா அவர்கள் 23.05.2003 ஆம் நாள் இறைபதம் எய்திய செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். இவரது பிரிவால் மீளாத்துயரடைந்துள்ள அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

**இவரின் பிரிவால் துயருறும்**
**கழக அமைப்பாளர், உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள், பணியாளர்கள், தனியார் பேருந்து உரிமையாளர் கழகம், வன்னி.**
(சி-7749)

## விழாக்காலச் சிறப்பு வாணிப உரிமம்

**எதிர்வரும் 2003.06.09 ஆம் நாள் இடம்பெறவுள்ள வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயப் பொங்கல் நிகழ்வில் வாணிபம் நடத்தவுள்ளோர் 2003.06.05 ஆம் நாள் தொடக்கம் ஆலய முன்றலில் செயற்படவுள்ள வருவாய்ப்பகுதிச் சிறப்புச் செயலகத்தில் விழாக்காலச் சிறப்பு வாணிப உரிமத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.**

வருவாய்ப்பகுதி,
நிதித்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

(3292)

## பயணியர் பேருந்துப் புதிய பணி

**ஆழியவளை, வேம்படி, மருதங்கேணி, புதுக்காட்டு நகர், பரந்தன், கிளிநொச்சி வழித்தடத்தில் 01.06.2003 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.**

### நேர ஒழுங்கு

**ஆழியவளை – கிளிநொச்சி**

| ஆழியவளை | வேம்படி | தாளையடி | மருதங்கேணி | மாசார் | புதுக்காட்டுநகர் | பரந்தன் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|---|
| காலை 07.00 | 07.15 | 07.30 | 07.40 | 07.50 | 08.00 | 08.45 | 09.00 |

**கிளிநொச்சி – ஆழியவளை**

| கிளிநொச்சி | பரந்தன் | புதுக்காட்டுநகர் | மாசார் | மருதங்கேணி | தாளையடி | வேம்படி | ஆழியவளை |
|---|---|---|---|---|---|---|---|
| பகல் 03.45 | 04.00 | 04.45 | 04.55 | 05.05 | 05.15 | 05.30 | 05.45 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி, வழியனுமதிப் பணியகம்.

(சி-8128)

# பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க விரும்புகின்றோம்

# அதற்கான சூழலைப் பாகிஸ்தான் ஏற்படுத்த வேண்டும்!

## - வெளிநாட்டு பயணத்திற்கு முன் பிரதமர் வாஜ்பாய்

**பாகிஸ்தானுடன் சமரசப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க இந்தியா விருப்பம் வெளியிட்டுள்ளது. ஆனால் இதற்கான சூழ்நிலையை பாகிஸ்தானே ஏற்படுத்திட வேண்டும் எனப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.**

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தி இருதரப்புப் பேச்சுக்களைத் தொடங்குவதற்கான சூழ்நிலையை பாகிஸ்தான் விரைவில் ஏற்படுத்தும் - என நம்புவதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

ஜேர்மனி, ரஷ்யா, பிரான்ஸ் நாடுகளில் ஒருவார சுற்றுப் பயணமாகப் பிரதமர் வாஜ்பாய் நேற்று டில்லியில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அவருடன் வெளியுறவு அமைச்சர் யஸ்வந்த் சின்ஹா வர்த்தக அமைச்சர் அருண் யேஸ்லி ஆகியோருடன் உயர் மட்டக் குழுவும் சென்றுள்ளது.

விமானநிலையத்தில்துணைப் பிரதமர் அத்வானி, மற்றும் மத்திய அமைச்சர்கள் வழியனுப்பி வைத்துள்ளனர்.

புறப்படு முன் செய்தியாளர்களிடம் பேசிய வாஜ்பாய், பாகிஸ்தானுடனான சமரசப் பேச்சுக்களை உடனடியாக தொடங்க இந்தியா விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் என நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.


அவர் மேலும் கூறுகையில், தமது ஒருவார பயணத்தில் அமெரிக்க சனாதிபதியை சந்திக்கும் திட்டம் எதுவும் வகுக்கப்படவில்லை என்றும், சீனா, ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளின் பிரதமர்களைச் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

அத்துடன், நேற்று மாலை ஜேர்மனி சென்ற அவர், இன்று அந்நாட்டு பிரதமருடனும் நாளை அந்நாட்டின் தொழிலதிபர்களுடன் பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

30 ஆம் திகதி ரஷ்யா செல்லும் வாஜ்பாய் ரஷ்யா, சீன சனாதிபதிகளை சந்தித்துப் பேசவுள்ளார்.

முதலாம் திகதி பிரான்சில் நடைபெறும் ஜி-8 மாநாட்டில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொள்ளவுள்ளார். அம்மாநாட்டில் அமெரிக்க சனாதிபதி புஷ்சை சந்தித்துப் பேசுவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இம்மாநாட்டில் பல தலைவர்களைச் சந்தித்து, சர்வதேச பயங்கரவாத ஒழிப்பு, பேரழிவு ஆயுதங்களுக்கு தடை, போதைப்பொருட்கள் கடத்தல் தடுப்பு போன்ற விடயங்கள் பற்றி பேச்சுகள் நடத்தவுள்ளார்.



விபத்துக்குள்ளான யாக்-42ரக உக்ரேன் விமானத்தின் சிதைவுக்கருகில் சமாதான படையினரின் புகைப்படமொன்று காணப்படுகின்றது



பாக்தாத் விமான நிலைய வீதியில் அமெரிக்க துருப்பினரைத் தாக்க பயன்படுத்தப்பட்ட ஈராக்கியரின் வாகனம் இத்தாக்குதலில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (இச்சம்பவத்தில் ஒரு அமெரிக்கப்படையினர் பலி, 4 பேர் காயம்.)

# போலிசாருக்கு புதிய சீருடை

(பாக்தாத்)

ஈராக்கிலுள்ள அந்நாட்டு பொலிசாருக்குப் புதிய சீருடைகள் வழங்கும் பணியை அமெரிக்கப் படையினர் தொடங்கியுள்ளனர்.

சதாம் ஹுசைனின் பாத் கட்சியிலிருந்து விலகுவதாக உறுதியளித்த பின்னரே ஈராக் பொலிசாருக்கு இந்தச் சீருடைகள் வழங்கப்படுகின்றன.

# இருதரப்பு உறவினை மேம்படுத்தும் பாகிஸ்தானின் நல்லெண்ண வெளிப்பாடு

## -தூதுவர்கள் மீண்டும் நியமனம்

இந்தியாவுடன் பேருந்து மற்றும் ரயில் போக்குவரத்தை உடனடியாகத் தொடக்க பாகிஸ்தான் சம்மதம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதராக அஜித் அகமது கானை பாகிஸ்தான் நியமித் துள்ளது.

இந்தியா பாகிஸ்தானிடையே உறவை வலுப்படுத்தும் முதல் கட்டமாக பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதராக சிவசங்கர் மேனன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து இந்தியாவுக்கான தூதராக அஜித்அகமது கானை நியமிக்க முடிவு செய்துள்ள பாகிஸ்தான் அரசு, இதற்கு இந்தியாவின் ஒப்புதலை முறைப்படி பெற்றதன் பின்னர் நியமித்துள்ளது. தற்போது பாகிஸ்தான் வெளியுறவு துறை செய்தி தொடர்பாளராக இருக்கும் அஜித்அகமதுகான் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த உதவுவார் என பாஸ்தான் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இதனிடையே வர்த்தகத் துறையில் இந்தியாவுக்கு சலுகைகள் வழங்கவும் விருப்ப நாடுகள் பட்டியலில் இந்தியாவை சேர்க்கவும், பாகிஸ்தான் வர்த்தகத்துறை அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் வர்த்தகத்திற்கு இந்தியா திட்டமிட்டு தடைகளை ஏற்படுத்துவதாகக் கூறியுள்ள அவர்கள் இந்நிலையில் இந்தியாவுக்கான சலுகைகளையும் எதிர்த்துள்ளனர்.

# உணவு கேட்டு உண்டவர்கள் கொடூரமாகத் தாக்குதல்!

## -ஒரே குடும்பத்தில் ஐவர் பலி

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீர் கேரி மாவட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 05 பேரைத் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றுள்ளார்கள்.

கேரி எனும் கிராமத்தில் ஹேகல்குஸா என்பவரது வீட்டில் கடந்த ஞாயிறு இரவு திடீரென நுழைந்த தீவிரவாதிகள், அவரிடம் உணவு கேட்டனர்.

உணவு அருந்திய பின்னர், அக்குடும்பத்தைச் சித்திரவதை செய்த பின்னரே சுட்டுக்கொண்டுள்ளனர்.

குஸா அவரது மனைவி அவர்களது 03 குழந்தைகள் ஆகியோர் இதில் உயிரிழந்துள்ளனர். அதன் பின்னர் தீவிரவாதிகள் அவ்வீட்டிற்குத் தீ வைத்துவிட்டு தப்பியோடிவிட்டனர்.



ஜப்பானின் வடகிழக்கில் சுகிடேட் நகரில் ஏற்பட்ட புவி நடுக்கத்தில் பாதிக்கப்பட்ட ஒரு பகுதி

# நிலத்தில் புதையுண்ட ஏவுகணை வெடித்து ஈராக்கில் 4 பேர் பலி; பலர் படுகாயம்

## - அதிகாரிகள் அக்கறையீனமே காரணம்

(பாக்தாத்)

ஈராக்கில் போரின்போது அந்நாட்டு வீரர்கள் பயன்படுத்தாமல் விட்டிருந்த ஏவுகணை ஒன்று தவறுதலாக வெடித்ததில் நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சியை வீழ்த்துவதற்காக அண்மையில் அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப் படைகள் அந்நாட்டின் மீது போர் தொடுத்தன.

அப்போது கஸ்ரா அதாஸ் பகுதியில் ஈராக்கிய படைகள் பயன்படுத்தாமல் விட்டுச் சென்ற சில ஏவுகணைகள் செயற்பாடற்றுக் கிடந்தன.

இது பற்றி ஈராக்கில் பணியில் உள்ள அமெரிக்க அதிகாரிகளுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. எனினும், அதனை அவர்கள் பொருட்படுத்தாமையினால் அங்குள்ள மக்கள் பூமிக்கடியிலுள்ள ஏவுகணையைத் தோண்டியெடுக்க முற்பட்டனர்.

அப்போது ஏவுகணை வெடித்துச் சிதறியதில் அருகிலிருந்த நான்கு பேர் கொல்லப்பட்டனர். பலருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

# பேச்சுக்களுக்கான இந்திய நிலைப்பாட்டில் தளர்வு!

(புதுடில்லி)

பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தைக்கு இந்தியா விதித்து வந்த முன் நிபந்தை தளர்த்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக இந்திய வெளியுறுவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா கருத்து வெளியிடும்போது,

பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தைக்கு முன்பு எல்லை தாண்டிய பயங்கரவாதம் முற்றிலுமாக நிறுத்தப்பட வேண்டும் என்று இந்தியா கூறாது. எனினும் எல்லை தாண்டிய பயங்கரவாதம் நிறுத்தப்படுவது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வலுச்சேர்ப்பதாக அமையும் என அவர் தெரிவித்தார்.

# படுகொலைகளை மூடிமறைக்க மேற்கொள்ளப்படும் கொலைகள்?

தென்னிலங்கையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் களத்தில் ஒரு காட்சி. சிறிலங்காவின் இரு பிரதான கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு இடையே பெரும் மோதலொன்று இடம்பெற்றுக் கொண்டிருந்தது. பலர் காயமடைந்திருந்தனர். எனினும், தீவிர மோதல் தொடரவே செய்தது. திடீரென இரு தரப்பினதும், ''தலைவர்களும்'' மோதல்களை உடனடியாக நிறுத்தும்படி உத்தரவிட்டனர். மோதலும் நின்றது. பின்னர் இரு குழுக்களினதும் தலைவர்களும் இப்படிப் பேசிக் கொண்டனராம். "அண்ணே என்ன செய்தாலும் நம்ம தலைவர் இப்பிடி செய்திருக்கக் கூடாது''

நடந்தது என்னவென்றால் மோதலில் ஈடுபட்டிருந்த இவ்விரு வன்முறைக் கும்பல்களுக்கும் ஒருவர்தான் தலைவர். அவர் இரு பிரதான கட்சிகளிடமும் பணத்தை வாங்கிக் கொண்டு இரு கட்சிகளுக்கும் தனது அடியாட்களை வாடகைக்கு விட்டிருந்தார். இதனால், இரு குழுக்களுக்கும் கடும் மோதல் ஏற்பட்டுக் கொண்டிருந்தபோதுதான் "அடிப்படையில்'' தாங்கள் ஒரே பாதாள உலகத் தலைவரின் கீழ் செயற்படுவது தெரியவந்தது.

சிறிலங்காவின் ''சனநாயக'' அரசியலில் பாதாள உலகக் குழுவினரின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாகி விட்டது. அதாவது, தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டுவது முதல் ஆட்சியைக் கொண்டு நடத்தும்போது அகற்ற முடியாத இடையூறுகளை நீக்குவது வரை இவர்களின் தயவு இரு கட்சிகளின் அரசியல்வாதிகளுக்குமே தேவைப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு பிரபலமாக இருந்த பாதாள உலகத் தலைவர்கள் சிலருக்கு அரசியல் வாதிகள் சேவை நலம் பாராட்டி புகழாரம் சூட்டும் நிகழ்வுகளும் சிறிலங்காவில் நடந்தேறியிருக்கின்றன.

இந்த வகையில் முன்னாள் சனாதிபதி ரணசிங்க பிரேமதாசவிற்கு மிக நெருக்கமான சொத்தி உபாலிக்கு பிரேமதாசவின் நெருங்கிய சகாவான முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே சூட்டிய புகழாரம் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

இவர்களின் தேவைகள் நிறைவேறியதும் அல்லது மாற்றுக்கட்சி ஆட்சிக்கு வந்ததும் பொலிஸ் படையைக் கொண்டு துரத்திப் பிடிப்பது, "தொல்லை'' கூடினால் மற்றொரு பாதாள உலகக் குழுவைக் கொண்டு கொன்றொழிப்பதும் வழமையாகும். இவ்வாறு ஒரு பெரிய

**வேலவன்**


நீண்ட வரலாறு எழுதக்கூடியளவிலான சம்பவங்கள் சிறிலங்காவின் பாதாள உலகத்தைப் பற்றி உள்ளது.

இவ்வாறான வகையில் கடந்த சில நாட்களில் நடைபெற்ற இரு கொலைகளில் பாதாள உலகக் குழுவினர் சம்பந்தப்பட்டிருப்பதும் இதில் கொல்லப்பட்ட ஒருவர் பாதாள உலகக் குழு ஒன்றின் தலைவராக இருந்துள்ளமையும் முக்கியமான விடயங்களாகும். ''மொறட்டுவ சமன்'' என அழைக்கப்படும் பாதாள உலகக் குழு ஒன்றின் தலைவரும். தென்மாகாண அமைச்சரான சண்டிமல்லி எனப்படும் ரஞ்சித் என்பவரும் கொழும்பில் வைத்தே கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதில் மொறட்டுவ சமன் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் கொலையுடன் நேரடித் தொடர்புடையவர் என பொலிசார் கூறியிருக்கின்றனர்.

சிறிலங்காவின் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், உடத்தலவின்ன படுகொலை தொடர்பாக இப்போது சிறைவாசம் அனுபவிப்பவருமான ஜெனரல் அனுரத்த ரத்வத்தவின் மகன் மஹேன் ரத்வத்தவின் தூண்டுதலில் மொறட்டுவ சமனும், மற்றொரு பாதாள உலகத்தவரான சஜீவ என்பவருமே இக்கொலையைச் செய்ததாக தகவல்கள் வெளியாகின. ரத்வத்தவின் மகன் மஹேன் ரத்வத்தவும் இப்பொழுது உடத்தலவின்ன படுகொலைச் சந்தேகநபராக சிறையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விபரங்களை கொழும்பு குற்றப்புலனாய்வுப் பணியகம் வெளியிட்டபோதும் இவர்களைக் கைது செய்ய அரசாங்கம்நடவடிக்கை எடுக்கவில்லை.



இப்பொழுது மொறட்டுவ சமன் கொழும்பில் வர்கனம் ஒன்றைச் செலுத்தியவாறு சென்று கொண்டிருந்தபோது மற்றொரு வாகனமொன்றில் வந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில், கொழும்பின் மையப்பகுதியில் வைத்து தென்மாகாண அமைச்சர் ரஞ்சித் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். இவரது கொலையை பாதாள உலகக் குழுவினரே செய்ததாக பொலிசார் கூறுகின்றனர்.

இவர் கொலை செய்யப்பட்ட இடம் குறித்து சிறிலங்கா குற்றப்புலனாய்வுப் பணியகம் அதிர்ச்சியடைந்துள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன. அதாவது, சட்ட விரோத ஆயுதங்களை வைத்திருந்ததாக அமைச்சர் ரஞ்சித் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் குற்றப் புலனாய்வுப் பணியகத்துக்கு கையொப்பமிட ரஞ்சித் வந்திருந்தார். இவ்வேளையில் குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் வாயிலில் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டார். சுட்டுக்கொன்றோரும் தப்பிச் சென்றிருக்கின்றனர். சனாதிபதிமாளிகை துறைமுக தலைமையகம் உள்ளிட்ட, காவலரண்கள் நிறைந்த இப்பகுதியில் நடைபெற்ற இச்சம்பவம் பலவகைக் கேள்விகளையும் சந்தேகங் களையும் எழுப்பக்கூடியவையாகும்.

எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு நெருங்கியவரான ரஞ்சித்துக்கு மற்றொரு பெயர் ''சண்டிமல்லி'' என இருப்பது அவரது குணாதிசயங்களை வெளிப்படுத்துகிறது எனலாம்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் செல்வாக்கு மிக்க ராஜபக்ச குடும்பத்திற்கு கடந்த இரண்டு தேர்தல்கள் சாதகமானதாக இருக்கவில்லை. பரம்பரையாகவே பாராளுமன்ற உறுப்பினர்பதவிகளை வைத்திருக்கும் இக்குடும்பம் நினைத்தளவு வெற்றியை இவற்றில் பெறவில்லை.

''ருகுணுச் சிங்கங்கள்''என்றும் பண்டார நாயக்கா குடும்பத்திற்கு இணையானவர்கள் என்றும் கூறப்படும் இவர்கள் கடந்த இரு தேர்தல்களிலும் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளைக் கைப்பற்றிக்கொள்ள முடிந்தபோதும் முன்னாள் சனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மகன் சஜித்பிரேமதாசவின் செல்வாக்கின்முன் தோல்வியே தழுவ நேர்ந்தது. அதாவது மாவட்டத்தில் பொ.ஐ. மு.வின் முதன்மை நிலையைத் தக்க வைக்க மகிந்தராஜபக்சவால் முடிய வில்லை.

2000 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் இழந்த முதன்மை நிலையை மீண்டும் பெற2001ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது வன்முறைகள் பலவற்றில் தொடர்புபட்டிருந்ததாக மகிந்த ராஜபக்ச மீது குற்றச் சாட்டுஉண்டு.

அதேவேளை, மகிந்த ராஜபக்ச சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சகோதரரான அனுராபண்டாரநாயக்காவிற்கு முதன்மைப்போட்டியாளராக இருக்கிறார். இப்போட்டியில் அநுராவுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியின் சகோதரர்என்பதை விட்டால் மகிந்த ராஜபக்சவுக்கு தகுதிகள் அதிகம் என அண்மையில் கட்சிக்குள் இடம்பெற்ற கருத்துக்கணிப்பு காட்டியுள்ளது.

எனவே மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய சகா இவ்வாறு கொலை செய்யப்பட்டிருப்பதுடன் பல ஊகங்களை ஏற்படுத்தக்கூடும்.

ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ இந்தக் கொலை குறித்து ஆராய்ந்துவிட்டு தான் பொறுமையின் எல்லைக்கே சென்று விட்டதாகக் கூறியிருக்கிறார். அத்துடன் உள்துறை அமைச்சையும் பொலிசாரையும் சாடியிருக்கிறார். இது குறித்து அறிக்கை தரப்படும் என அரசாங்கம் பதிலளித் ததற்கு இது வெறும் கேலிக்கூத்தென வர்ணித்திருக்கிறார். பொதுசன ஐக்கிய முன்னணியினர் உள்துறை அமைச்சர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர திட்டமிட்டுள்ளனர். இவையெல்லாம் சனாதிபதி சந்திரிகா ஐ.தே.மு. அரசாங் கத்திற்கெதிரான தனது இடைவிடாத தாக்குதலின் அடுத்தகட்டத்திற்கு நகர்துள்ளதை வெளிப்படுத்துகிறது.

இதேவேளை, இக்கொலைகளைப் பாதாள உலகத்தவரே செய்துள்ளதாகப் பொலிசார் கூறுகின்றனர். அக்கூற்றுக்கள் உண்மையாகவும் இருக்கலாம் கொலை செய்தவர்களைப் பொலிசார் கண்டு பிடித்து வெளிப்படுத்தவும்கூடும்.சில வருடங்களின் பின் இன்னொரு சம்பவத்தில் இவர்கள் இன்னொரு குழுவினரால் படுகொலை செய்யப்படவும் கூடும்.

ஆனால் இக்கொலைகளுக்கு ஏவியவர்கள் யார்? எதற்காக ஏவினார்கள் என்ற விடயங்கள் இவர்களின் கொலைகளுடன் மறைந்து விடுவதே வழமையாக உள்ளது.

இவ்வாறே மொறட்டுவ சமன் போன்றோரின் கொலைகளுடன்,

□ மாமனிதர் குமார் பொன்னம்பலம் படுகொலை

□சட்டண ஆசிரியர் ரோகண குமார படுகொலை

என்பன மூடிக்கட்டப்படுகின்றன என்பதே யதார்த்தமாகும். □

---

**கோணாவில் யூனியன் குளம்**

## பிரதான வீதிப் பாலம் சிதைவடைவால் வாகனப் போக்குவரத்து நிறுத்தம்!

அக்கராயன் கோணாவில் பிரதான வீதியின் யூனியன்குளம் பகுதியில் அமைந்துள்ள பாரிய பாலம் உடைந்து சிதைவடைந்துள்ளதன் காரணத்தினால் மேற்படி வீதியால் பேருந்துகளோ அன்றி பாரவூர்திகளோ பயணிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அக்கராயன் பிரதேசத்திற்கு பொருட்களை ஏற்றிச் செல்லும் பாரவூர்திகள் கந்தபுரம் வழியாக அம்பலப்பெருமாள் சந்தி சென்று அவ்வழியாக அக்கராயன் பகுதியை சென்றடைய வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

சிதைவடைந்துள்ள இப்பாலத்திற்கருகாமையில் சிறியகுளம் ஒன்று இருப்பதன் காரணத்தினால் அவ்விடத்தில் தற்காலிகப் பாதை அமைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக நடை பாதையாக மண் அணைபோடப்பட்டு அதனூடாகவே மக்கள் பயணித்து வருகின்றனர்.

இப்பகுதியில் தென்னை வாழைப்பயிர்ச் செய்கையினை மேற்கொண்டு வரும் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை சந்தைப்படுத்துவதற்கு கந்தபுரம் அல்லது கிளிநொச்சிப் பகுதி சந்தைக்கே விற்பனை செய்வதற்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இப்பாலம் உடைத்துள்ளதன் விளைவாக தனி நபர் வண்டிகள். அதாவது, துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிளைத் தவிர வேறு எந்த வாகனங்களும் அவ்வீதியூடாகப் பயணிக்க முடியாத நிலையில் அப்பகுதியிலிருந்து விற்பனைப் பொருட்களை எடுத்துச் செல்லும் விவசாயிகள் பல கிலோமீற்றர்களை பெரும் பணச் செலவினூடாக எடுத்துச் சென்றே விற்பனை செய்ய வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.



தற்போது ஏற்பட்டுள்ள இயல்பு நிலையில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களோ அன்றி உதவி வழங்கும் நிறுவனங்களோ முன்வந்து, இப்பாலத்தினைப் புனரமைப்புச் செய்து இப்பிரதேச மக்களின் போக்குவரத்துக்கு வழிசமைக்க மாட்டார்களாவென அக்கிராமத்து மக்கள் வினாவெழுப்பியுள்ளனர். (சேரன்)

# சிரானின் தோல்வியும் இடைக்கால நிர்வாகசபைக் கோரிக்கையும்

நிதி நிர்வாகத்தைக் கையாளக்கூடிய போதிய அதிகாரங்களைக் கொண்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த விடுதலைப்புலிகளின் கோரிக்கையானது ஏன் தற்பொழுது முன்வைக்கப்பட்டது. இது டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றுவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள முன் நிபந்தனைகளா? என்பவை இன்று அரசியல் வட்டாரங்களில் வாதப் பிரதிவாதங்களுக்கு உட்பட்டுள்ள முக்கிய விவகாரம் ஆகியுள்ளது.

முதலில், டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றுவதற்கு முன்னராக இடைக்கால நிதி நிர்வாகக் கட்டமைப்பு குறித்த உறுதியான பதில் ஒன்றை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் எனப் புலிகள் நேற்றோ அன்றி அதற்கு முதல் நாளோ கோரவில்லை. சுமார் ஒரு மாதத்திற்கு முன்பதாகவே தமது நிலைப்பாடு குறித்து விடுதலைப்புலிகள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அறிவிப்புச் செய்திருந்தனர்.

ஆகையினால், விடுதலைப்புலிகள் டோக்கியோ மாநாட்டைக் குழப்பத்திற்கு உள்ளாக்குவதையோ, டோக்கியோ மாநாட்டைப் பகிஷ்கரிப்பதையோ நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. போதிய காலஅவகாசத்துடன் கொடுக்கப்பட்ட முன்னறிவிப்புடனேயே விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வந்தனர்.

அத்தோடு, டோக்கியோ மாநாடு பெருமளவு நிதியினைச் சிறிலங்காவிற்கு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வருடாந்தம் ஒரு பில்.அமெரிக்க டொலர் வீதம் மூன்று ஆண்டுகளுக்கு வழங்குமாறு கோருவதே சிறிலங்கா அரசாங்கத்தின் நோக்கமாகவுள்ளது. கோரப்படும் நிதியில் பெருமளவு நிதி கிடைக்கப் பெறுவதற்கான வாய்ப்புக்களும் உண்டு. ஏனெனில் இவ் நிதி உதவி வழங்கும் மாநாட்டில் சிறிலங்காவிற்கு 'நிதி உதவி வழங்கும் முக்கிய நாடான ஜப்பானும், இன்று உலகின் முதன்மை வல்லரசான அமெரிக்காவும் அக்கறை எடுத்துக் கொண்டுள்ளன.

யுத்தத்தினால் பாதிப்புற்ற மக்களுக்கான புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிக்கென வழங்கப்பெறும் இந் நிதியுதவியினைப் பெற்றுக் கொள்வதென்பதில் விடுதலைப் புலிகளுக்கு எந்தவித ஆட்சேபமும் இல்லை. யுத்தத்தினால் பாதிப்புற்ற மக்களுக்குக் குறிப்பாக வடக்கு - கிழக்கு மக்களுக்கு சர்வதேச சமூகம் பெரும் உதவியளிக்க முன்வர வேண்டும் எனப் புலிகள் ஏற்கனவே கோரியும் உள்ளனர்.

இந்நிலையில் டோக்கியோ மாநாட்டை விடுதலைப்புலிகள் பகிஷ்கரிப்பதென்பதோ, அதில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்ள விரும்புகின்றனர் என்ற ரீதியிலோ வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் அர்த்தமற்றவையாகும். விடுதலைப்புலிகளைப் பொறுத்து வடக்கு - கிழக்குப் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள நிதி நிர்வாகத்தைக் கையாளக்கூடிய ஒரு வலுவான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியம் என்பதே ஆகும். அப்பொழுதே டோக்கியோ மாநாட்டிலும் சரி, வேறு மார்க்கங்களில் ஆயினும் சரி கிடைக்கப்பெறும் நிதியினை சீரான முறையில் வடக்கு-கிழக்கில் புனர்வாழ்வுப் பணிக்குப் பயன்படுத்த முடியும் என்பது புலிகளின் நிலைப்பாடாகும்.

இவ் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த கோரிக்கை கூட விடுதலைப்புலிகளினால் திடீரென முன்வைக்கப்பட்டதொன்றல்ல. இடைக்கால நிர்வாக கட்டமைப்பு குறித்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட போதே - அதாவது தாய்லாந்தில் இடம்பெற்ற முதலாம், இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போதே உடனடிப் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் என்றே அறிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் 'சிரானின்' பணிகள் முடுக்கி விடப்பட்டதோடு நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற நிதி உதவி வழங்கும் மாநாட்டிற்கு விடுதலைப்புலிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால், அதுவரையிலோ அன்றி அதற்குப் பின்னர் சில மாதங்கள் வரையிலோ 'சிரான்' நிதியினைக் கையாளும் சட்ட அங்கீகாரம் கொண்டிருக்கவில்லை என்ற பேச்சு வெளிவரவில்லை. அதாவது சட்டமா அதிபர் இதுவரையில் வேறு ஏதோ ஒரு யோசனையில் ஆழ்ந்திருந்தவர் போன்று நடந்து கொண்டிருந்தார்.

இதேவேளை 'சிரானின்' செயற்பாட்டில் ஏற்படக்கூடிய சட்டச்சிக்கல்கள் குறித்து அரசாங்கமும் அண்மைக் காலம் வரையில் எதுவும் பேசவில்லை. இந்நிலையானது சமாதானப் பேச்சுவார்த்தைகளை நேர்மையுடன் முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதையே வெளிக்காட்டுவதாய் இருந்தது.

இந்நிலையில், சட்டரீதியான அங்கீகாரம் கிடைக்கப் பெறாத நிலையில் 'சிரான்' பேசப்பட்ட விடயமாக இருந்தது.

ஆனால், பேச்சுவார்த்தைகள் ஆரம்பமான நிலையில், இடைக்கால நிர்வாக சபை குறித்த பேச்சுக்கள் அரசியல் ரீதியில் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கலாம் என்ற நிலையில் அது தொடர்பான பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டு, வடக்கு-கிழக்கு உடனடி புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைக்கென உபகுழு ஒன்று அமைக்கப்பட்டது. "சிரான்" என அழைக்கப்படும் இவ் உபகுழு, இது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடித் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத்தைக் கொண்டது எனப் பிரகடனம் செய்யப்பட்டது.

அத்தோடு இச் 'சிரான்' ஓர் தற்கால அமைப்பே எனவும் படிப்படியாக இடைக்கால நிர்வாகம் நோக்கி முன்னேறுவதெனவும் பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் 'சிரான்' நிறுவப்பட்டு ஆறு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அதனால் மக்கள் பயன் எதுவும் அடைந்ததாக இல்லை. சுருக்கமாகக் கூறுவதானால் 'சிரான்' தோல்வியடைந்தது என்றே கூறலாம்.

'சிரான்' தனது இலக்கை எட்டமுடியாது போனமைக்கு, சிரானுக்கான சட்ட அங்கீகாரம் குறிப்பாக நிதியினைக் கையாள்வதற்கான அங்கீகாரம் கொண்டதாக இல்லாமல் இருந்தமையே காரணமாகும். இது ஒருவகையில் அரசாங்கம் புரிந்த மோசடித்தனமான செயல் என்று கூடக்கூறலாம்.

ஏனெனில், 'சிரான்' உருவாக்கப்பட்டபோது, இவ்வமைப்பானது வடக்கு-கிழக்கிற்கான வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற நிதியினைக் கூடப் பயன்படுத்த முடியாத நிலையில் செயலிழந்துபோனது என்றே கூறலாம். இச் செயலிழப்பானது 'சிரானினால்' இனி தனது குறிக்கோளை எட்டமுடியாது என்பதையே வெளிப்படுத்தியது.

'சிரான்' நெருக்கடிகளை எதிர் நோக்கியுள்ளதென்ற நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட அடுத்த கட்ட நடவடிக்கையானது பேச்சுவார்த்தை மூலம் உருவாக்கிய 'சிரானின்' எதிர்காலத்தை மட்டுமல்ல, சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மீதான நம்பிக்கையைச் சிதைத்து அதன் எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்கும் ஒன்றாகியது.

அதாவது 'சிரான்' அடையாளம் காட்டிய உடனடி புனரமைப்புப் பணிகளைப் பிரதமர் நிதியத்தின் ஊடாக செயற்படுத்த அரசாங்கம் முனைந்தமையானது ஒரு கையில் கொடுக்கப்பட்டதை மறுகையால் தட்டிப் பறிப்பது போன்றிருந்தது. அதுமாத்திரமல்லாது இருதரப்பு விடயத்தை ஒரு தரப்பாக்கியது. அதாவது பேச்சுவார்த்தை மூலம் இணக்கம் காணப்பட்ட விடயத்தைப் புறந்தள்ளி தமது அதிகாரத்தின் கீழ் எடுத்துக் கொண்டதாகியது. இது பேச்சுவார்த்தைகளையே அர்த்தமற்றதாக்கியது.

இவ்வாறாகச் 'சிரான்' தோல்வியடைந்தமையானது சட்ட அங்கீகாரத்துடன் கூடியதான - அதாவது அதிகாரங்களுடன் கூடியதான நிதிக்கட்டமைப்பு அவசியம் என்றதொரு கட்டாயத்தைப் புலிகளுக்கு ஏற்படுத்தியது எனலாம். இந்நிலையிலேயே விடுதலைப் புலிகள் முன்னர் இடைநிறுத்தியிருந்த இடைக்கால நிர்வாகம் குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும்/உறுதிமொழியையும் முன்வைக்குமாறு கோரிக்கைகளை முன்வைக்க வேண்டியதாயிற்று.

இதேவேளை விடுதலைப்புலிகள், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை கோரிய பின்னதான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் கூட, ஐயங்களைத் தோற்றுவிப்பதாகவும் அதிகாரப் பரவலாக்கல் நடவடிக்கைகளில் அரசாங்கம் பின்னடிப்பதையுமே வெளிப்படுத்துவதாக இருந்தது.

அதாவது 'சிரானுக்கு' மாற்றீடாக அரசாங்கம் பரிந்துரை செய்துள்ள வடக்கு-கிழக்கு அபிவிருத்தி மற்றும் மீள் கட்டமைப்பு சபை (டீ.ஆர்.சி) யும் சட்டரீதியாக வலுவற்றது என்பது மட்டுமல்ல, அதன் உருவாக்கம் ஒரு முன்மொழிவாக முன்வைக்கப்பட்டுள்ளதே ஒழிய அது ஒரு வரையறை செய்யப்பட்ட கட்டமைப்பாக முன்வைக்கப்பட்டதாக இல்லை. அதுமாத்திரமல்ல, இவ் டீ.ஆர்.சி பிரதமர் அலுவலகத்தின் கீழ் செயற்படும் அமைப்பாக உருவாக்கப்படவுள்ளதாகவும் அரசாங்கத்தரப்பால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்தவகையில் பார்க்கையில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் - அதாவது வடக்கு-கிழக்கிற்கான அதிகாரப் பகிர்வில் இறங்கி வருவதற்கான உறுதியான நிலைப்பாட்டை வெளிக்காட்டுவதாகத் தெரியவில்லை. அத்தோடு வடக்கு - கிழக்குப் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கான உறுதியானதும் விடுதலைப்புலிகளுடனான பங்கேற்புடன் கூடியதுமானதொரு முன்மாதிரியினை வெளிப்படுத்துவதாகவும் தெரியவில்லை.

இந்நிலையில்தான் விடுதலைப்புலிகள் வடக்கு - கிழக்கு புனரமைப்புப் பணிகளுக்கென டோக்கியோவில் நிதியுதவி கிடைக்கப் பெறுகையில் - அதற்கு முன்னதானதொரு அமைப்பினை உருவாக்குமாறு கோருகின்றனர். இக் கோரிக்கையானது புதிதானதோ அன்றி முன் நிபந்தனையானதோ அல்ல.

சமாதான முயற்சிகளில் சம பங்குதாரர்களாகவுள்ள புலிகள் - வடக்கு-கிழக்குப் புனரமைப்புப் பணிகளுக்கான நிதியைக் கையாளக்கூடிய அதிகாரங்கொண்டவர்களாக இல்லாதுவிடில் டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றுவதில் அர்த்தமில்லை. இதனை அரசாங்கத்தரப்பு சட்டச் சிக்கல்கள், அரசியல் எதிர்ப்புக்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு புறந்தள்ளினால் இனப்பிரச்சினைக்கான தீர்வில் இன்னமும் எட்டப்பட வேண்டிய கடினமான இலக்குகளை இவ் அரசாங்கம் எப்படி எட்டுமென எதிர்பார்க்க முடியும்.

♡♡♡

**-ஜெயராஜ்**

---

- மட்டக்களப்பு நகரில் -

## ரோந்து நடவடிக்கைகள் கெடுபிடிகள் அதிகரிப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தற்போது படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் பொலிசாரின் கெடுபிடிகளும் அதிகரித்துள்ளன.

இரவு பகலாக வீதியெங்கும் படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் வீதிகளில் பொலிசார் குவிக்கப்பட்டு பொதுமக்களை விசாரணை செய்து வருவதுடன் உடற்சோதனையும் மேற்கொள்கின்றனர்.

இதனால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

## மட்டு. ஆசிரிய கலாசாலை மாணவன் மீது தாக்குதல்

### - எதிர்த்து ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை மாணவன் ஒருவர் இனந் தெரியாதோரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இரண்டாம் வருட ஆசிரிய மாணவரான பாலமுரளிதரன் என்பவரே இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டவராவார்.

இதனைக்கண்டித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தினால் நடைபெற இருந்த உள்ளகப்பரீட்சைகளுக்கு தடை ஏற்பட்டுள்ளது.

மாணவன் தாக்கப்பட்டதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சட்ட நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்ந்து இடம்பெறும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## இருகுழுவினருக்கு தொடர்பு?

(கொழும்பு)

தென்மாகாண அமைச்சர் ரஞ்சித்தின் கொலை இரண்டு பாதாள உலக கோஷ்டியினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என கொழும்பு பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதிலியனகே தெரிவித்துள்ளார். தென்மாகாணத்தையும் கொழும்பு பகுதியையும் சேர்ந்த இரு கோஷ்டியினர் இந்தக் கொலையுடன் தொடர்புபட்டிருப்பதாகத் தான் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## சமூக உணர்வூட்டாளர்களுக்கான வதிவிட, வெளிக்களப் பயிற்சி

2003 ஆம் ஆண்டுக்கான நியாப் திட்ட இலக்கு கிராமங்களில் சேவை புரியும் சமூக உணர்வூட்டாளர்களுக்கும், ஏற்கனவே கிளிநொச்சி மாவட்டத்தில் சமூக உணர்வூட்டாளர்களாக சேவை புரிவோருக்குமான 3 நாள் வதிவிடப் பயிற்சியும், ஒரு நாள் களப்பயிற்சியும் இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளி. செயலகத்தில் கடந்த 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பெற்ற இப்பயிற்சி வகுப்பின் ஆரம்ப நிகழ்வில் சர்வதேச தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் ஜோய் மகேஸ்வரன், கிளி. மேலதிக அரசாங்க அதிபரும், நியாப் திட்ட பிரதித் திட்டப் பணிப்பாளருமான நா.வேதநாயகன், தமிழர் புனர்வாழ்வுக்கழக சமூக உணர்வூட்டல் பகுதிப் பணிப்பாளர் நீலகண்டன், தமிழர் புனர்வாழ்வுக் கழக கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் மா.ஜெறாட் மற்றும் நியாப் திட்ட உதவியாளர்கள், சமூக உணர்வூட்டாளர்கள், கிளிநொச்சி மாவட்ட சமூக உணர்வூட்டல் இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர்.

இப்பயிற்சியில் 40 சமூக உணர்வூட்டாளர்கள் பயிற்சியினைப் பெற்றுள்ளனர்.




## கத்திக்குத்தில் ஒருவர் காயம்!

(வட்டக்கச்சி)

இராமநாதபுரம் சம்புக்குளம் பகுதியில் வாய்த் தர்க்கம் பின் கத்திக் குத்தில் முடிந்ததில் ஒருவர் காயமடைந்தார்.இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு எட்டு மணியளவில் நடைபெற்றது.

ஆறுமுகம் சந்திரசேகர் (வயது - 22) என்ற நபரே காயமடைந்த நிலையில், சிகிச்சைக்காக தருமபுரம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். (12)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் 4239 ஏக்கரில் நெற்செய்கை

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2003 ஆம் ஆண்டிற்கான சிறுபோகப் பயிர்ச்செய்கை 4239 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

பத்து பாரிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் 3956 ஏக்கரும், சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ், 283 ஏக்கரும் பயிரிடப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் புள்ளிவிபரக் குறிப்பு தெரிவிக்கின்றது. (பா)

# எம்மால் கோரப்பட்ட அளவு எரிபொருளை எடுத்துவர அரசு அனுமதிப்பதில்லை

## தட்டுப்பாட்டுக்கு அதுவே காரணம் என்கிறார் கூ.ச.தலைவர்

(அலுவலக செய்தியாளர்)

**எம்மால் கோரப்படுகின்ற அளவு எரிபொருட்களை இங்கு எடுத்து வருவதற்கு அரசாங்கத்தால் அனுமதி வழங்கப்படாததாலேயே இம்மாவட்டத்துக்கான எரிபொருள் தேவையினைப் பூர்த்திசெய்யமுடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். என கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வைத்தியலிங்கம் குகராசா தெரிவித்தார்.**

அவர்மேலும் தெரிவிக்கையில்; கிளிநொச்சி மாவட்டபயன்பாட்டுக்கென மட்டும் முப்பத்து மூவாயிரம் லீற்றர் பெற்றோலும், இரண்டுலட்சம் லீற்றர் டீசலும் எம்மால் கோரப்பட்டிருந்தது. ஆனால் ஆறாயிரத்து அறுநூறு லீற்றர் பெற்றோலையும் ஐம்பத்தாறாயிரத்து எழுநூறு லீற்றர் டீசலையுமே கொண்டு வருவதற்கு எமக்கு அனுமதியுள்ளது.

இதனைவிட ஒரு லீற்றர் எரிபொருள் கூட குறிப்பிட்ட மேலதிகமாகக் கொண்டு வருவதற்கும் வழங்கப்படும் எரிபொருளை குறிப்பிட்ட ஒரு நாள் முன்னதாகக் கொண்டு வருவதற்கும் இயலாது. அவ்வளவு இறுக்கமான நடைமுறைகடைப் பிடிக்கப்படுகின்றது.

சமாதான சூழலை அடுத்து இந்த மாவட்டம் துரித வளர்ச்சி கண்டுவருகின்றது. இதனால் அபிவிருத்திப் பணிகள், கட்டட நிர்மாணப்பணிகள், அதிகரித்த பயணிகள் போக் குவரத்து,பொது நிறுவனங்களின் வாகனப்போக்குவரத்து, விவசாய அபிவிருத்தி என்பன துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருவதுடன் ஏ-9 வீதியூடான வெளிமாவட்ட போக்குவரத்தினாலும் எரிபொருள் தேவை சடுதியாக அதிகரித்துக் கொண்டு வருகின்றது. ஆயினும் வழங்கல் மட்டுப்படுத்தப்பட்டே உள்ளது இதனால் மக்கள் தேவையை ஈடுசெய்ய முடியாத அவலநிலைக்கு நாம் தள்ளப் பட்டுள்ளோம்.

இது தொடர்பாக உயரதிகாரிகளுக்கு கடிதங்கள் மூலம் பல தடவை எடுத்துக்கூறியும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட வில்லை. மக்கள் சேவையினராகிய நாம் மக்களின் தேவையினை ஈடுசெய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

## கால் நடைகளை கட்டுப்படுத்த கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறு போக செய்கைக்காக கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

விவசாயமும் கால்நடை வளர்ப்பும் பொருளாதாரத்தின் முக்கியமாததாகும் கட்டாக்காலிகளாகவுள்ள கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதோடு கால் நடைகள் வளர்ப்போர்தமது கால் நடைகளை பயிர்ச்செய்கை பண்ணப்பட்டிருக்கும் விளை நிலங்களிற்கு அப்பால் வைத்து பராமரிக்குமாறும் முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம் தெரிவித்துள்ளது. (பா)

## பூநகரி ப.நோ.கூ.சங்க கறுக்காய்த்தீவுக் கிளை திறப்பு

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கிளை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பூநகரி கறுக்காய்த்தீவுப் பகுதியில் 1991ஆம் ஆண்டு வலம்புரி இராணுவ நடவடிக்கை மூலம் இடம் பெயர்ந்த மேற்படி கிளை நிலையம் சொந்த இடத்தில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பூநகரி கூட்டுறவுச் சங்கத்தலைவர் பொன். தில்லைநாதன் நாடாவை வெட்டித்திறந்து வைத்துள்ளார். (பா)

-தொற்றுநோய் பரவும் சாத்தியமுள்ளதால்-

## மாத்தறை மாவட்ட பாடசாலைகள் காலவரையறையின்றி மூடப்பட்டன!

(கொழும்பு)

மாத்தறை மாவட்ட பாடசாலைகள் அனைத்துக்கும் காலவரையறையற்ற விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம், மண்சரிவு காரணமாக தொற்று நோய்கள் பரவுவதற்கான சாத்தியங்கள் இருப்பதால் இது குறித்து இயற்கை அனர்த்த நிர்வாக கட்டமைப்பு கல்வித்துறை அமைச்சருக்கு அறிவித்ததையடுத்து கல்வி மனிதவள அபிவிருத்தி அமைச்சு மாத்தறை மாவட்ட பாடசாலைகளுக்கு கால வரையறையற்ற விடுமுறையை அறிவித்துள்ளது.

இருப்பினும் மே 31ஆம் ஜூன்-1 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள க.பொ.தஉயர்தரப்பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ்

## ஜூன் 9முதல் கிளி. வலய மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்க நடவடிக்கை!

(அலுவலக செய்தியாளர்)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் கிளி.வலய பாடசாலை மாணவர்களுக்குப் போசாக்கு உணவு வழங்குவதற்கான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் பகல் 10.00 மணிக்கு கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில்நடைபெற்றது.

கிளி.வலயக் கல்விப்பணிமனை மண்டபத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் உலக உணவுத் திட்ட பிரதிநிதிகள், கிளி. வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம்,பிரதிக்கோட்டக் கல்விப்பணிப்பாளர்கள், கிளி. வலய பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் ஜூன் மாதம் 9ஆம் திகதி முதல் கிளி.வலய பாடசாலை மாணவர்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் போசாக்கு உணவு வழங்குவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதென உலக உணவுத்திட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (சோ)

## கிளிநொச்சி நகருக்கு பேருந்து சேவையை நடத்த வேண்டுகை

வடமராட்சி கிழக்கிலிருந்து கிளிநொச்சி நகருக்கு நேரடியாக தனியாக பேருந்து சேவையொன்றை நடத்துமாறு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். வடமராட்சி கிழக்கிலிருந்து முகமாலைக்கு மூன்று வாகனச் சேவைகளும் கிளிநொச்சியிலிருந்து தாளையடியூடாக பருத்தித்துறைக்கு ஒரு பேருந்து சேவையும், இவைகளைவிட சாவகச்சேரிக்கு இரண்டு மீன் வாகனமும்,கிளிநொச்சிக்கு ஒரு மீன் வானும் வடமராட்சி கிழக்கு சிற்றூர்தி சங்கத்தினரால் நடத்தப்பட்டு வருகின்றது.

ஆனால், வடமராட்சிகிழக்கிலிருந்து கிளிநொச்சிக்கு தனியான ஒரு வாகனசேவை நடத்தப்படவில்லை. வடமராட்சி கிழக்குப்பகுதியிலிருந்து பெருமளவான மக்கள் ஒவ்வொரு நாளும்கிளிநொச்சிக்குச் சென்று வருகின்றனர். அவர்கள் அரச திணைக்களங்கள் மற்றும், வைத்தியசாலை தேவைகளுக்கு செல்கின்றனர். இவர்கள் கிளிநொச்சி செல்வதற்கு மீன் வானைத்தான் நம்பிஇருக்கின்றார்கள். இல்லாது போனால் பருத்தித்துறையிலிருந்து தாளையடி வந்து கிளிநொச்சிக்குப் போகும் பேருந்தில் செல்லவேண்டும் அந்தப் பேருந்து மருதங்கேணிப் பகுதிக்கு வர காலை10.30 மணியாகும். அது கிளிநொச்சி போய்ச் சேர காலை 11.30 மணியாகும் திரும்பவும் 2.00மணிக்கு புறப்படும் எனவே இந்தப்பேருந்தில் போய்எந்த ஒருவேலையும் செய்து முடித்து விட்டுதிரும்பஇயலாதநிலை மக்களுக்கு உள்ளது. இதனால் இப்பிரதேச மக்கள்மீன் வானை நம்பித் தான் இருக்கின்றார்கள். மீன் வான் சிரிவான்கள் என்பதால் அதில் பயணம் செய்யும்பயணிகளுக்கும் மீன் வியாபாரிகளும்சன நெரிசல் காரணமாக வாக்குவாதப்படுவதும் சிலவேளைகளில் வாக்குவாதம் கைகலப்பிலும் முடிவடைகின்றது. (11)

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி இல 30 திருநகரைச் சேர்ந்த ஏ.சதீஸ்குமார் என்பவரது மோட்டார் சைக்கிள் திருப்புவரி அட்டையுடன் கோணாவில் முறிப்புப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு திருநகர் சிவகுமரன் பல்பொருள் வாணிபத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர்நேரில் சென்று பெற்றுக்கொள்ளவும். (சோ)

- தென்னிலங்கையில் -

## பெருமளவு மோட்டார் சைக்கிள்களை திருடிய கும்பல் பிடிபட்டது

(கொழும்பு)

பெருமளவு மோட்டார் சைக்கிள்களைத் திருடியுள்ள கும்பல் ஒன்றை வீரன்குள பொலிசார் கைது செய்துள்ளனர்.

40 மோட்டார் சைக்கிள்களை இவர்களிடமிருந்து பொலிசார் கைப் பற்றியுள்ளனர். எட்டு சந்தேகநபர்களைக் கைது செய்துள்ள பொலிசார் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் பாகங்களையும் பொலிசார் கண்டெடுத்துள்ளனர்.

கிரிந்திவலப் பகுதியிலுள்ள மோட்டார்சைக்கிளின் போலியா ஆவணங்களைத் தயாரிக்கும் நிலையம் ஒன்றையும் பொலிசார் கைப் பற்றியுள்ளனர்.


## நினைவழியா நினைவுடன்



கடற்புலி மேஜர் தமிழ்வேந்தன்

பாலசிங்கம் தனபாலசிங்கம்

மயிலிட்டி வடக்கு -யாழ்

மண்ணில் 03-04-1976

விண்ணில் 28-05-2000

சம்பவம் அறுகுவெளிப்பகுதியில் ஏற்பட்ட மோதலின்போது

வீசுகின்ற தென்றலும்
அர்த்தராத்திரி சந்திரனும்
பாறையில் மோதி எழும் அலைகளும் -உன்
புகழ் பாடுதய்யா
தமிழ் மண் காத்திட சீறும் புலியே
கடல்மடியேறி நீசர்களை அழித்த கடற்புலியே
அறுகுவெளி மண்ணில் வீழ்ந்திட்ட இளம்புலியே
தம்பி தமிழ்வேந்தனே
ஆறவில்லை எம் துயரம்
சீறி எழுந்த ஆழியின் மகனே மீண்டும் நீ வந்து பிறந்திடு இம்மண்ணில்
ஒரு ஆழியின்மகனாக

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

திருமுகாண்டவர் வீதி,
08ஆம் வட்டாரம் மந்துவில்,
புதுக்குடியிருப்பு.

என்றும்உன் நினைவுடன் வாழும்
இந்திராக்கா குடும்பத்தினர்.

(3218)

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 16-01-1976



தாயக மண்ணில் 28-05-2000

கரும்புலி மேஜர் புவிரஞ்சினி [சதா]

*மாணிக்கம் கனகாம்பிகை (சித்திரா)*

எம் வீட்டின் இளையவளாய்
எல்லோருக்கும் இனியவளாய்
எம் மண்ணில் ஒளி விளக்காய்
ஆனாய் அம்மா
உம்மைப் பிரிந்து
மூன்றாண்டுகள் சென்றாலும்
மாறிடுமோஉன் நினைவு

முகவரி:
4ஆம் யூனிற்,
திருநகர்,
இல. 429,
மல்லாவி.

உன் பிரிவால் துயருறும்
அம்மா, சகோதர சகோதரிகள்,
சகோதரி போராளி கோமதி (புவி)

(3269)

## சிந்தனைக்கு



அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவை புரியும் பணி. மக்களின் நல்வாழ்விற்கு ஆற்றப்படும் தொண்டு.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 28-05-2003

# அரசியல் யாப்புத் தடையல்ல

சிறிலங்கா அரசியல் யாப்பிற்கு உட்பட்டதாக விடுதலைப்புலிகளினால் கோரப்படும் இடைக்கால நிர்வாக சபை அமைக்க முடியுமா? இது இன்று பலராலும் சர்ச்சைக்குரிய விடயமாக பிரஸ்தாபிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், மற்றொரு புறத்தில் இது அரசியல் யாப்பிற்கு உட்பட்டவிடயமல்ல, அரசியல் யாப்பிற்கு அப்பாற்பட்டதாக இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமைக்கப்படுகையில் அதனை நீதிமன்றம் ஒன்றுமே செய்ய இயலாது. அதாவது தடைவிதிக்கவோ அன்றி கட்டுப்பாடுகள் விதிக்கவோ முடியாது என அபிப்பிராயம் வெளியிடுபவர்களும் உண்டு.

ஆனால், இவ்விவாதங்கள் ஒரு புறம் இருக்கையில் அரசியல் யாப்பிற்கு உட்பட்டதாகவோ அன்றி உட்படாத வகையிலோ நாட்டின் நன்மை கருதி இடைக்கால நிர்வாக சபையொன்றை அமைக்கமுடியாதா என்ற கேள்வியும் இல்லாமல் இல்லை. அதாவது, அண்மைக்கால அரசியல் நடவடிக்கைகள் யாவும் அரசியல் யாப்பிற்கு உட்பட்டவிதத்தில் தான் நடைபெறுகின்றனவா? அன்றி அரசியல் யாப்பு என்பது நாட்டின் நன்மைகருதி திருத்தித்தான் அமைக்கப்பட முடியாததா?

சிறிலங்கா அரசியல் யாப்பின் பிரகாரம் யுத்தத்தினை பிரகடனம் செய்யும் அதிகாரமும், யுத்தநிறுத்தத்தை அறிவிப்புச் செய்யும் அதிகாரமும் முப்படைகளின் தளபதியான சந்திரிகாவுக்கே உண்டு. ஆனால், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்பாட்டைச் செய்து கொள்வதிலோ அன்றி பிரகடனப்படுத்துவதிலோ சனாதிபதி சந்திரிகா பங்கேதும் வகிக்கவில்லை. ஆனால், அறிவிப்புச் செய்யப்பட்ட யுத்தநிறுத்தம் பதினைந்து மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் அமுலில் உள்ளது.

அவ்வாறானால், இவ்அரசியல் யாப்பிற்கு மாறான / முரணான செயல் எவ்வாறு அமுல் வந்தது. நீடித்துச் செல்கின்றது. உயர் நீதிமன்றம் இதற்கு எதிராக இதுவரையில் தீர்வெதுவும் அளிக்காமல் உள்ளது. அது மாத்திரமல்ல இவ் யுத்தநிறுத்த உடன்பாட்டின் சரத்துக்கள் பல சிறிலங்கா அரசியல் யாப்பிற்கு மாறானவையாகவும் உள்ளது. அதாவது சிறிலங்கா ஆட்சியாளர்கள் பெரிதும் பேசிக் கொள்ளும் பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பனவற்றிற்கே இவ் உடன்பாடு மாறாக உள்ளது என்பதே யதார்த்தமானதாய் உள்ளது.

அவ்வாறு இருந்தும் அரசியல் யாப்பினால் இதுவரையில் எதுவும் செய்யமுடியாது போயுள்ளது ஏன்? அதாவது இவ் யுத்த நிறுத்த உடன்பாடானது நாட்டு மக்களின் நன்மைகருதி மேற்கொள்ளப்பட்ட தொன்றாகவும், நாட்டு மக்களின் விருப்பிற்குட்பட்ட தொன்றாகவும் இருப்பதினால் அரசியல் யாப்பிற்கு முரண்படுகின்றதோ இல்லையோ அதை ஏற்றுக்கொள்ளப்பட்ட தொன்றான விடயமாகியுள்ளது

இது ஒருபுறமிருக்க இலங்கை 'சுதந்திரம்' பெற்றதன் பின் இரு தடவைகள் அதன் அரசியல் யாப்பு மாற்றப்பட்டுள்ளது. அதாவது மூன்று அரசியல் யாப்பின் கீழ் இலங்கை ஆட்சிக்குட்பட்டு உள்ளது. இது மாத்திரமல்ல அரசியல் யாப்புக்களில் காலத்திற்குக் காலம் திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளன.

இந்தவகையில் 1978 ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் கொண்டு வரப்பட்ட அரசியல் யாப்பில் இதுவரையில் 17 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அதாவது அரசியல் யாப்பும் மாற்றப்படுகின்றன. திருத்தங்களும் செய்யப்படுகின்றன. அவ்வாறானால் அரசியல் யாப்பிற்கு உட்பட்ட விடயம், உட்படாத விடயம் என கூறிக்கொள்வதானது எத்தனை தூரம் அர்த்த பூர்வமான வாதம் ஒன்றாக இருக்கமுடியும்.

அதாவது நாட்டின் நன்மை கருதி அரசியல் யாப்புக்கள் மாற்றி அமைக்கப்படலாம். மாற்றியமைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாது போனால் நாடு செயற்பாடு அற்றதாகிவிடும். இதன் மூலம் அரசியல் யாப்பும் அர்த்தமற்ற தொன்றாகிவிடும். அத்தோடு அரசியல் யாப்பு ஒன்று தேவைதானா என்ற கேள்வியும் தவிர்க்க முடியாததொன்றாகிவிடும்.

ஆகையினால், அரசியல் யாப்பிற்கு முரண்பாடானது? அன்றி அரசியல் யாப்புடன் முரண்படலாம் என்ற ரீதியில் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது விடுதல் என்பது அரசியல் யதார்த்தத்திற்கு முரண்பாடானதொன்றாகக் கூட அமையலாம். அதாவது நாட்டிற்கு கேடு விளைவதாகக்கூட அவை அமையலாம்

எடுத்துக்காட்டாக இனப்பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வு முயற்சிகள் அரசியல் யாப்பிற்கு முரண்பாடானதாக அமையும் பட்சத்தில் அதிலிருந்து அரசாங்கம் பின்வாங்க முனைவதானது நாட்டிற்கு நல்லதாக அமையமாட்டாது. நாடு எதிர்கொள்ளும் நெருக்கடிகள், நாட்டிற்கான தேவை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆட்சியாளர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தான் வேண்டும். அதன் முடிவை தீர்மானிப்பவர்களாக மக்களே இருக்கமுடியும். இருப்பார்கள். இதனை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளாது விடில் அரசியல் யாப்புடன் சேர்ந்து ஆட்சியாளர்களையும் மக்கள் புறக்கணித்துவிடும் அரசியற் சூழ்நிலை உருவாகினாலும் கூட ஆச்சரியத்திற்குரியதாக இருக்கமாட்டாது.

### சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால்

# யாழ். இல் சிறுவர்களின் பிரச்சினைகளை ஆராயும் மாநாடு நடைபெற ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்குடா நாட்டு சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் என்ற பொருளிலான சிறுவர் மாநாடு ஒன்று இடம்பெறவுள்ளது.

அடுத்தமாதம் ஏழாம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இம் மாநாடு இடம்பெறவுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாட்டில் யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளையும் சேர்ந்த சுமார் ஆயிரத்து ஐந்நூறு சிறுவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த மாநாட்டில் சிறிலங்கா அரசினதும், விடுதலைப்புலிகளினதும் முக்கிய பிரதிநிதிகளும், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் சிறுவர்கள் கல்வி வலயங்களின் ஊடாகவும், பிரதேச சபைகளின் ஊடாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் அரசு இணங்கினால் அதை எதிர்ப்போம்!

### ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலர் எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை அமைக்க சிறிலங்கா அரசாங்கம் இணங்கினால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என ஜே.வி.பி. எச்சரித்துள்ளது.

இந்த அறிவிப்பை ஜே.வி.பி.யின் பிரச்சார செயலர் டில்வின் சில்வா வெளியிட்டுள்ளார்.

சிறிலங்கா அரசியல் யாப்பிற்கு இணையாக நிர்வாக அமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டால் அதனை ஜே.வி.பி. ஆதரிக்கும். வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் அமைக்கும் யோசனை குறித்து சிறிலங்கா அரசாங்கம் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவதை எதிர்ப்பதாக சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

வடகிழக்கில் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து விலகியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# படையினர் முட்டுக்கட்டை!

(திருமலை)

திருமலை குச்சவெளிப்பகுதியில் மீளக் குடியமரும் மக்களுக்குச் சிறிலங்கா கடற்படையினர் முட்டுக்கட்டையிட்டு வருகின்றனர்.

மீளக் குடியேறச் செல்லும் மக்களிடம் காணி உறுதிப்பத்திரங்களை சிறிலங்கா கடற்படையினர் கோரிவருவதாகவும், அரசினால் காணிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களை ஏற்க மறுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### - வெள்ளம், மண் சரிவினால் -

# 13,200 ஹெக்ரேயர் நில பயிர்ச்செய்கை அழிவு!

(கொழும்பு)

தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தினாலும், மண் சரிவுகளினாலும் பதின் மூவாயிரத்து இருநூறு ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என விவசாய அமைச்சுத் தெரிவித்துள்ளது. மாத்தறையில் ஆறாயிரம் ஹெக்ரேயரும், காலியில் நான்காயிரம் ஹெக்ரேயரும் களுத்துறையில் ஐநூறு ஹெக்ரேயரும், இரத்தினபுரியில் ஆயிரம் ஹெக்ரேயரும், அம்பாந்தோட்டையில் எண்ணூறு ஹெக்ரேயரிலும் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக விவசாய அமைச்சு ஆலோசித்து வருகின்றது.

# சிறீலங்கா தேசியக் கொடியாக புலிக்கொடி ஒளிபரப்பு!

விடுதலைப்புலிகளின் கொடியினை சிறிலங்காவின் தேசியக் கொடியாக அமெரிக்கத் தொலைக்காட்சி ஒன்று ஒளிபரப்புச் செய்துள்ளது.

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்குத் தொடர்பான செய்தியை ஒளிபரப்புச் செய்த போதே இத் தொலைக்காட்சி நிறுவனம் சிங்கக்கொடிக்குப் பதிலாக தமிழீழ விடுதலைப்புலிகளின் கொடியை ஒளிபரப்பியது.




# செரீனா- ஆம்பஜராகாஸி 2-வது சுற்றுக்குத் தகுதி

பாரீசில் நடைபெறும் பிரான்ஸ் கிண்ண டென்னிஸ் போட்டியில் பெண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் ஜேர்மனியின் பார்பராரிட்ணரைத் தோற்றடித்து, இரண்டாவது சுற்றில் விளையாடத் தகுதிபெற்றுள்ளார். 6:2, 6:1 எனும் செட் கணக்கில் கால் வெற்றியடைந்துள்ளார்.

அதேபோல் ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் அமெரிக்காவின் ஆம்பஜராகாஸி, ஷோவாக்கோனவா கரோல் பெக்கை 6:2,6:3, 6:3 செட் கணக்கில் வென்று, இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளார்.

# தமிழ் வர்த்தகரிடம் கொள்ளை!

இரகசியப் பொலிசாரென கூறிதமிழ் வர்த்தகர் ஒருவரிடம் கொள்ளைக் கும்பலொன்று தமது கைவரிசையைக் காட்டியுள்ளது. கேகாலைப் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான நகையும் பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது. மயில்வாகனம் மகாதேவன் என்ற வர்த்தகரின் வீட்டிற்கு வானில் கடந்த 24 ஆம் திகதி வந்த கொள்ளையரே அவரைக் கடத்திச்சென்று இக் கொள்ளையிலீடுபட்டனர். இவர் பிரிட்டனில் இருந்து தமது பெற்றோரைப் பார்க்க வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அரசியல் தலையீடு விளையாட்டில் வேண்டாம்

### -வசிம் அக்ரம்

விளையாட்டில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் வசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

ஒரு நாள் கிரிக்கெட்டில் ஐநூறுக்கும் அதிகமான விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய போதும் இறுதிக் காலத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அக்ரமுக்கு போதிய மரியாதை கொடுக்கவில்லை. இதனால் ஓய்வு ஒன்றே சரியான முடிவு என அக்ரம் விலகிவிட்டார்.

விளையாட்டில் இப்போது அரசியல் தலையீடு அதிகமாகி விட்டது விளையாட்டிலிருந்து அரசியல் முற்றிலுமாக நீங்க வேண்டும் பிரச்சினைகளில் தவிக்கும் இரு நாடுகளை ஒன்று சேர்க்க விளையாட்டு மட்டும் தான் சரியானவழி.

இந்தியா-பாகிஸ்தான் நாடுகளிடையே பல ஆண்டுகளாகப் பிரச்சினை இருந்து வருகிறது. இரு நாடுகளும் மீண்டும் கிரிக்கெட் உறவைப் புதுப்பித்துக் கொண்டால் ஓரளவு பிரச்சினையைத் தீர்க்க வழிபிறக்கும் என்றும் கூறினார்.

# ஹெய்டனுக்கு முதலிடம்!

கிரிக்கெட் டெஸ்ட் தர வரிசையில் அவுஸ்திரேலிய அணியின் தொடக்க ஆட்டக்காரரான ஹெய்டன் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளார். இங்கிலாந்து அணியின் மைக்கல் வோகன் இரண்டாம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஹெய்டனின் சராசரி 83,18 ஆகும்.

மேலும் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஷோன் பொலக் பந்து வீச்சில் முதலிடத்தையும், அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத் 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

# காணாமற் போனோர் வாரத்தை முன்னிட்டு கொழும்பில் நாளை ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

சர்வதேச காணாமற் போனோர் வாரத்தை முன்னிட்டு நாளை கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இலங்கையில் உள்ள காணாமற் போனோரின் பெற்றோர் மற்றும் குடும்ப அங்கத்தவர் அமைப்பு, அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்க நாடுகளில் உள்ள இதுபோன்ற அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து சர்வதேச ரீதியில் காணாமல் போனோர் வாரத்தை பிரகடனப் படுத்தியுள்ளது.

மே 29ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரை இவ்வாரம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இந்த வாரத்தில் பல நடவடிக்கைகளை முன்னெடுக்கும் இலங்கையில் காணாமற்போனோர் அமைப்பு அதன் ஒரு பகுதியாகவே நாளை கொழும்பில் ஆர்பாட்டத்தையும் பொது நிகழ்ச்சிகளையும் நடத்தவுள்ளது.

# சனாதிபதியின் பணிப்புரையை அமுலாக்க அபிவிருத்தி லொத்தர் சபைத்தலைவர் மறுப்பு

## அமைச்சரூடாக வந்தாலே செயற்படுத்துவாராம்

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் சனாதிபதியின் பணிப்புரையை அமுலாக்க மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் மீள் கொடுப்பனவு தவிர்ந்த ஏனைய கொடுப்பனவுகளை நிறுத்துமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் ஜே.கே.பெனாண்டோவிற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். புதிய பிரச்சாரத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவை பற்றிய விபரத்திட்டத்தினையும் சமர்ப்பிக்குமாறும் புதிதாக வேலைக்கு ஆட்கள் அமர்த்தப்படுவதை நிறுத்துமாறும் சனாதிபதி பணித்துள்ளார்.

தாம் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் உத்தரவிற்கமையவே நடப்பதாகவும் சனாதிபதியின் பணிப்புரைகள் அனைத்தும் அமைச்சருக்கூடாக வந்தாலே அவற்றை நாம் நடைமுறைப் படுத்துவோம் என அபிவிருத்தி லொத்தர் சபைத் தலைவர் கூறியுள்ளார்.

## 'சுதந்திரப் பறவைகள்' ஏடு வெளிவந்துள்ளது

(அலுவலக செய்தியாளர்)

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடாகிய சுதந்திரப் பறவைகள் ஏட்டின் பங்குனி, சித்திரை, வைகாசி மாத ஏடு வெளிவந்துள்ளது.

இக்காலப் பகுதியில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளின் வர்ணப் புகைப்படங்களை முன் அட்டையில் தாங்கியும் மற்றும் பல்வேறு விடயங்களை சுமந்தும் இந்த ஏடு வெளிவந்துள்ளது.

சுதீபா எழுதிய சிகரங்களைத் தொட்ட பின்னும் இன்றும் பெண், பிரமிளா எழுதிய அந்த ஏழு நாட்கள், நர்மதா எழுதிய கிராம மக்களுக்கு உயிரூட்டிய தேசிய பெண்கள் மாநாடு, கதை விளம்பி எழுதிய பேசாப் பொருள், மலைமகள் எழுதிய , இலக்கியம் படைத்த எரிமலை, கார்முகில் எழுதிய உழைக்கும் கரங்கள், சூரியநிலா எழுதிய தோளணைத் தேன் தோழி, தமிழ்க்கவி எழுதிய தீச்சுடர்-03, அம்புலி எழுதிய யுத்தபூமி இன்னமும் அப்படியே, தாமரைச்செல்வி எழுதிய இனிவானம் வெளிச்சிடும் போன்ற அம்சங்களுடன் அழுவதற்கு நேரமில்லை ஒரு பார்வை, உலக வரலாற்றில் செல்வாக்குச் செலுத்திய பெண்கள், அப்பாவும் மாவீரராய் வருவார் போன்ற பல விடயங்களைத் தாங்கி சுதந்திரப் பறவைகள் ஏடு வெளிவந்துள்ளது. (லோ)

### கண்ணிவெடிச்...

நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

சிறப்புரையினை த.பு.க. திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்டி, கிளி. மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், ஐ.நா.அபிவிருத்தித்திட்டப் பிரதிநிதி யூடிக்கிறேசன், கலாநிதி ஜெய் மகேஸ்வரன், மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு இணைப்பாளர் பரணி ஆகியோர் நிகழ்த்தினர்.

த.பு.க. நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி அவர்கள் தெரிவிக்கையில், இச்செயலகத்தின் பிரதான பணியாக கண்ணிவெடி அகற்றுதல், கண்ணிவெடிகளை அடையாளம் காணுதல், கண்ணிவெடி விழிப்புணர்வு போன்ற செயற்பாடுகளை இலகுபடுத்தி ஒருங்கிணைத்து செயற்படுத்துவதே முக்கிய பணியாகுமென்றார்.

நன்றியுரையினை ம.நே.கண்ணிவெடி அகற்றும் பிரிவு இணைப்பாளர் யோகன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் டென்மார்க் கண்ணிவெடி அமைப்பு (DDU) பிரித்தானிய கண்ணிவெடி அமைப்புப்பான HALLO, TRUT, MAG, NPA, UNDP, UNICEF ஆகிய சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### அமைச்சர் ராஜித...

சென்று பார்வையிட்டு அங்கு விவசாய நடவடிக்கைகளைப் பொதுமக்கள் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பார் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அவ்வாறு எதுவும் இடம் பெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (27)

### டோக்கியோ...

அரசு ஆதரவளிக்கக்கூடாது என பௌத்த பிக்குகள் கோரி உள்ளதோடு ஜப்பான் நாட்டில் விடுதலைப் புலிகள் பங்கேற்றால் அவர்கள் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுவிடுவார்கள் என்று அவர்கள் தமது மகஜரில் தெரிவித்துள்ளனர்.

### 1000 பேருக்கு...

நியமனம் வழங்குவதற்கான திறைசேரி அங்கீகாரத்தை கல்வி அமைச்சு பொதுச்சேவை ஆணைக் குழுவிற்கு சமர்ப்பித்துள்ளது.

இவ்வாறு வழங்கப்பட்ட அங்கீகாரத்தை பொதுச் சேவைகள் ஆணைக்குழு நாளை இடம்பெறவுள்ள தனது கூட்டத்தில் பரிசீலித்து தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கு அங்கீகாரத்தை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார். (லோ)

### இடைக்கால நிர்வா...

வெளியிட்டார்.

நேற்று முன்தினம் ஜப்பான் சென்றுள்ள நோர்வே பிரதமர் அங்கு ஜப்பான் பிரமதர் உட்பட பலரையும் சந்தித்துப் பேசியுள்ளதுடன் பல நிகழ்வுகளிலும் கலந்து கொண்டார்.

ஜப்பான் பிரதமருடனான சந்திப்பின் போது இலங்கையின் சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள் தொடர்பாகப் பேசப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

### அவுஸ்...

என அவுஸ்திரேலிய வெளியுறவுத் துறை அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு புலிகள் அமைப்பைக் கேட்டுக் கொள்வதாகவும், புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து தற்காலிகமாக ஒதுங்கியிருப்பது கவலைக்குரியது என்றும் அவர் கூறியுள்ளார்.


## பொற்காலம் வர்ணக்கலையகம்

[வெண்புறா முன்பாக] மேல் மாடி

## பணிநிலை வெற்றிடம்

பணிநிலை :- முகாமையாளர்.

தகைமை :- (புகைப்படத்துறையில் அனுபவம் உடையவர். அரச பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்)

சம்பளம் :- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பணிக்கு தகைமை உடையவர்கள் 02-06-2003 திங்கட்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகம் (FUJI FILM),
பொற்காலம் வர்ணக்கலையகம்,
வெண்புறா முன்பாக, (மேல்மாடி), கிளிநொச்சி.

(293)


## - போரினால் பாதிக்கப்பட்ட -

# சிறுவர்களுக்கான இடைத்தங்கல் முகாமிற்கு அடிக்கல் நாட்டல்!

(அலுவலக செய்தியாளர்)

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடைமுறைப் படுத்தப்படவுள்ள போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான இடைத்தங்கல் முகாமிற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று பி.ப.2.00 மணிக்கு கிளிநொச்சி கனகபுரத்தில் நடைபெற்றது.

அவுஸ்திரேலிய த.பு.கழகத்தைச் சேர்ந்த நரேன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொதுச் சுடரினை சர்வதேச நிறுவன இணைப்பாளர் தியாகராசா ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினைத் தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். அடுத்து மங்கல விளக்கினை யுனிசெவ் நிறுவன மல்லாவி வதிவிடப் பிரதிநிதி பெனிபுருவ், கலாநிதி ஜெய் மகேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைக்க இடைத்தங்கல் முகாமிற்கான அடிக்கல்லினை இலங்கைக்கான யுனிசெவ் பிரதிநிதி சைபன், தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் சர்வதேச தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் கலாநிதி ஜெய் மகேஸ்வரன் ஆகியோர் நாட்டிவைத்தனர்.

த.பு.க.நிறைவேற்றுப்பணிப்பாளர் கே.பி.றெஜி, த.பு.க திட்டப்பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்டி, யுனிசெவ் இலங்கை பிரதிநி சைபன், தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## - பூநகரிப் பிரதேசத்தில் -

# கண்ணிவெடிகளை அகற்றும் ஒப்பந்தம் கைச்சாத்து!

(அலுவலக செய்தியாளர்)

பூநகரிப் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றுவது சம்பந்தமான ஒப்பந்தமொன்று நேற்று தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியத்தில் வைத்து கைச்சாத்திடப்பட்டது.

நேற்று மதியம் 12.30 மணியளவில் டென்மார்க் கண்ணிவெடி அகற்றும் பிரிவுப் பிரதிநிதி எரிக்விலிசன், தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி ஆகியோர் மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக கொழும்பு மாவட்டப் பொறுப்பாளர் பரராஜசிங்கமும் இவ் வைபவத்தில் கலந்துகொண்டார்.

ஒப்பந்தத்தினையடுத்து விரைவில் பூநகரிப் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## - ஏ-9 பிரதான நெடுஞ்சாலையில் -

# சைக்கிளில் சமாந்தரமாகச் சென்ற இருவருக்கு 500 ரூபா வீதம் தண்டம்

(அலுவலக செய்தியாளர்)

வீதிப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் துவிச்சக்கரவண்டியில் சமாந்தரமாக பிரதான வீதியில் பயணித்த இருவருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதியாளரால் தலா 500 ரூபா வீதம் தண்டம் செலுத்தும் வண்ணம் தீர்ப்பு வழங்கப்பட்டது.

நேற்று பகல் கிளிநொச்சி ஏ-9 நெடுஞ்சாலையில் சமாந்தரமாகத் துவிச்சக்கரவண்டியில் பயணித்த இருவரையும் தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் கைதுசெய்து கிளி. மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தினர்.

இவர்களை விசாரணை மேற்கொண்ட கிளி. மாவட்ட நீதியாளர் மேற்படி இருவருக்கும் தலா 500 ரூபா வீதம் தண்டம் விதித்து தீர்ப்பு வழங்கினார். (சோ)

### புலமைப்பரிசில்...

டங்களில் இரண்டு அடிக்கு மேலாக சேறு நிரம்பியுள்ளது இதனால் மீண்டும் உடனடியாகப் பாடசாலைகளை ஆரம்பிக்கமுடியாதுள்ளது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

### அரசின் உத்தேச...

ஹெய்ம் அரசின் உத்தேச பிரேரணைகளைப் புலிகளிடம் சமர்ப்பிப்பதற்குச் செல்வதற்கான இறுதிக் கட்ட ஏற்பாடுகளுக்காக காத்திப்பதாகக் கூறியுள்ளார்.

### தரவை படைமுகாம்...

தனின் உருவப்படத்தை சிறப்புத் தளபதி ரமேஸ் ஏனைய 17 போராளிகளின் உருவப்படங்களை மட்டு-அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் நிர்வாகத்துறை பொறுப்பாளர் றெஜினோல்ட் ஆகியோர் திரைநீக்கம் செய்துவைத்தார்கள்.

படையணி வீரர்கள் மத்தியில் கிரிக்கெட், கரபந்தாட்டம், மெய்வல்லுனர் போட்டிகள் என்பனவும் இடம்பெற்றன.

இரவு கருத்துரைகளும் இசை நிகழ்ச்சிகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.


## நடத்துநர் பணி நேர்முகத்தேர்வு

## தமிழீழப் போக்குவரவுக்கழகம்

தமிழீழப்போக்குவரவுக்கழக நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத்தேர்வு 30-05-2003, 31-05-2003 ஆம் நாள் வெள்ளி,சனி காலை 10.00 மணி தொடக்கம் பகல் 03.00 மணிவரை தமிழீழப்போக்கு வரவுக்கழகம் - பேருந்துப்பகுதி புதுக்குடியிருப்பு பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித் தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் வகையில் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக்கழகம்.

(சி-8126)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.